வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# திருக்குறளில் விருந்தோம்பல் வாண்மைத்துவம்

**முனைவர் ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுச்சுருக்கம்**

இல்லறத்தார் பேண வேண்டிய ஐவருள் ஒருவர் விருந்தினர் ஆவார். வீட்டிற்கு புதிதாக வருபவர்களை விருந்தினர்கள் எனக் கூறுகின்றோம். விருந்தினர்களை உபசரித்தலைக் கடமையாக எண்ணி அதன் வழி சங்ககால மக்கள் வாழ்ந்து வந்தனர். தற்போது உறவினர்களையும் நண்பர்களையும் மட்டுமே விருந்தினர் என்கின்ற பதம் குறித்து வருகிறது.. விருந்தோம்பல் என்கின்ற செயல்பாடு தனித்திறனோடு மேம்பட்டு வளரத் தேவையான வழிமுறைகளைச் சொல்லும் வாண்மைத்துவச் செய்திகளை வள்ளுவம் வழி இக்கட்டுரையில் எடுத்துச் சொல்லப்படுகிறது.

**கலைச்சொற்கள்**

அதிதி, வருவிருந்தினர், தருவிருந்தினர், வாண்மைத்துவம், ஹாஸ்பிட்டாலிட்டி

**முன்னுரை**

நாணயத்தின் இரு பக்கங்களாகவும் தமிழ்நாடு செய்த தவப்பயனாகவும் திருவள்ளுவரின் பிறப்பும் திருக்குறளின் சிறப்பும் அமைந்துள்ளது. ஈரடிகளைக் கொண்ட குறள் வெண்பாக்களால் உலகை அளந்த ஞானப் பெருவள்ளலாகத் திகழும் திருவள்ளுவரின் ஆசையானது அறவழியில் பொருளை ஈட்டி, இன்பம் துய்த்து, இல்லறக் கடமைகளையும் சமூகக் கடமைகளையும் செவ்வனே செய்து ஒவ்வொருவரும் சிறப்புற்று வாழ வேண்டும் என்பதே ஆகும். குடும்பமாக மனிதன் வாழத் தொடங்கிய போது அன்பை நெம்புகோலாகப் பயன்படுத்தி இல்லறத்தை இனிய அறமாக மாற்ற வேண்டும் எனக் கூறினார். அறத்தின் நீட்சியாகவும் பண்பாட்டின் வெளிச்சமாகவும்

இல்லற விருட்சத்தின் ஆணி வேராகவும் விருந்தோம்பல் பார்க்கப்படுகிறது. விருந்தோம்பலை வளர்விக்கும் ஆற்றலாகவும் கருவியாகவும் திகழ்கின்ற வாண்மைத்துவ படிநிலைகளை இக்கட்டுரையில் காணலாம்.

**வாண்மைத்துவம்**

செயல்பாடு ஒன்றினை மேற்கொள்ளும்போது அதன் வளர்ச்சிக்குத் தேவையான திறன்களைக் கொண்டிருத்தலே வாண்மைத்துவமாகும். குறிப்பிட்ட ஒரு தொழிலின் எல்லைகள், வரையறைகள் ஆகியவை மிகத் தெளிவாகவும் எல்லோராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலும் அமைந்திருப்பதே வாண்மைத்துவத்தின் சிறப்பாகும். சாதாரண அறிவு மற்றும் திறன்களைப் பார்க்கிலும் கூடுதலான அறிவினை வாண்மைத்துவம் பெற்றிருக்கும்.

மாண்புமிக்க வாண்மைத்துவமானது பொது மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கக் கூடியதாகவும், தேர்ந்தெடுத்தப் பணிக்காகவே வாழ்நாள் முழுவதும் அர்ப்பணம் செய்வதாகவும் அமைகின்றது. வாண்மைத்துவம் என்பது காலம், பணி போன்றவற்றிற்கு ஏற்ப வேறுபடக் கூடியது. ஒரு செயலைச் செயல்படுத்த தேவையான நிபுணத்துவ அறிவை வாண்மைத்துவம் கொண்டிருக்கும். மானிடர் ஒவ்வொருவரும் பெற இருக்கும் பேறுகளை வெற்றிகரமான வகையில் உருவாக்கத் தேவைப்படுகின்ற திறன்கள், தேர்ச்சிகள் ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ளும் செயல்முறையே வாண்மைத்துவம் ஆகும் என்று அறிஞர் ஹசல் கூறுகிறார். (The process of improving staff skills and competencies needed to produce outstanding results . (Hassesl 1999)).

**விருந்தோம்பல்**

அறிமுகம் இல்லாத புதியவர்கள் வீட்டிற்கு வரும்போது அவர்களை அன்புடன் வரவேற்று அமர வைத்து இன்முகத்தோடு உண்பதற்கு உணவு தருவதே மெய்யான விருந்தோம்பலாகும். விருந்து எனின் புதுமை என்றும் ஓம்புதல் எனின் போற்றுதல் என்றும் பொருள்படும். இதனையே தொல்காப்பியர் "விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (தொல். செய்யுளியல் 231) எனக் கூறுகிறார். சுயநலம் நீங்கி அடுத்தவர்கள் உண்பதில் இன்பம் காணும் கருணை நிலையே விருந்தோம்பல் ஆகும். ஆங்கிலத்தில் விருந்தோம்பல் என்ற சொல்லுக்கு 'ஹாஸ்பிட்டாலிட்டி' என்று பெயர். லத்தீன் சொல்லான 'ஹாஸ்பிட்டல்' என்பது விருந்தினரின் தங்கும் அறையைக்

குறிக்கிறது. ஜெனியா என்ற கிரேக்க விதி விருந்தினர்களைக் கடவுளின் பிரதிநிதிகளாகக் கருத வேண்டும் எனக் கூறுகிறது. அதிதி என்றால் விருந்தினன் என்று கழகத் தமிழ் அகராதியும் , விருந்து தந்து உபசரித்தலே விருந்தோம்பல் என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் பொருள் தருகிறது. விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை' உண்டிக்கழகு விருந்தோடு உண்ணல்' என அதிவீரராமப் பாண்டியரின் வெற்றி வேட்கையும் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என மணிமேகலையும் 'அதிதி தேவோ பவ' ( விருந்தாளி கடவுளுக்கு நிகரானவர்) என சமஸ்கிருதமும் கூறுகிறது.

**இல்லறம்**

இல்லறம் என்பதற்கு மனைவாழ்க்கை, குடிவாழ்க்கை என்று கழகத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. அறத்தோடு இல்லத்திலுள்ளோரை வழிநடத்துவது என்றும் பொருள் கொள்ளலாம். பழிக்கு அஞ்சுபவனாகவும் பகுத்துண்ணும் வழக்கம் உடையவனாகவும் இல்வாழ்வான் திகழ வேண்டும். இல்+அறம் எனப் பிரித்து பார்க்கும் போது அடக்கம், வாய்மை, மனத்தூய்மை, பொறுமை, கடமை எளிமை ஆகிய அனைத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்தோமானால் இல்லறம் இனிக்கும். இக்கருத்தின் பிரதிபலிப்பாக , அன்பும் அறமும் இல்வாழ்க்கையில் அவசியம் இருக்க வேண்டும் என்ற வள்ளுவரின் வாக்கு நினைவில் வருகிறது.

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" [ குறள் 45 ]

தானும் அறவழியில் நடந்து பிறரையும் அவ்வழியில் நடப்பிக்கச் செய்வதே மிகச் சிறந்த வாழ்க்கையாகும். துறவிகளின் நோன்பைக் காட்டிலும் அது பெருமையுடையதாகும்.

" ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" [குறள் 48 ]

**விருந்தோம்பல் வாண்மைத்துவம்**

விருந்தோம்பல் என்னும் பண்பு சிறக்கவும், நெடிது வளரவும் உதவியாக இருப்பதையே 'விருந்தோம்பல் வாண்மைத்துவம்' எனக் கூறுகின்றோம். வாழ்க்கைத் துணை நலம், அன்பு, மக்கட்பேறு, இனியவை கூறல், நடுவுநிலைமை, பொருள்

செயல்வகை, உழவு ஆகிய அதிகாரங்களின் ஊடாக விருந்தோம்பலின் வளர்ச்சிக்குத் துணை புரியும் வாண்மைத்துவத்தைக் கூறியுள்ளார்

**1.வாழ்க்கைத்துணை நலம்**

இல்லத்தில் விருந்தோம்பல் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் நடைபெற வேண்டுமாயின் குடும்பத் தலைவியானவள் உடல் மற்றும் உள்ளம் நலனோடு இருப்பது மிகமிக அவசியம். ஒரு கை தட்டினால் ஓசை வராது என்பதற்கேற்ப கணவனும் மனைவியும் நலத்தோடும் வளத்தோடும் ஒருசேர இணைந்து உபசரித்தால்தான் அந்த விருந்தோம்பல் சிறப்புறும். வாழ்க்கைக்கேற்ற பண்பு நலனுடன் , தன் கணவனின் வருவாய் அறிந்து வாழ்க்கை நடத்துபவளே சிறந்த துணையாவாள் என வள்ளுவம் கூறுகிறது.

“ மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை” [குறள் 51]

**2.அன்புடைமை**

அன்பு என்ற மூன்றெழுத்து ஆயுதமே சக மனிதர்களைக் கட்டுக்குள் வைத்திருக்கும் தாரக மந்திரமாகும். சக மனிதர்களைக் கண்டு இனிய சொல் கூறுவதற்கு முன் இன்முகத்தோடு வரவேற்றலே அன்பின் முதல் நிலை ஆகும்.

“ அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு “ [குறள் 80]

**3. இனியவை கூறல்**

விருந்தினராக ஒருவர் நம் இல்லத்திற்கு வருகிறார் எனின் அவரை முதலில் இனிய முகத்தோடு வரவேற்று அதன் பின்னரே இனிமையான சொற்களைப் பேச வேண்டும். உள்ளத்தில் கள்ளமில்லாமல் அதே சமயம் பிறரைக் காயப்படுத்தாமல் வெளிவரும் சொற்களே இனிமையான சொற்களாகும்.

“ சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்” [குறள் 98]

“ முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினிதே அறம்” [ குறள் 93]

**4. நடுவுநிலைமை**

எப்பக்கமும் சாயாமல் உறுதியோடும் நடுவுநிலைமையோடும் உள்ளம் இருக்குமானால் அத்தகையவர் கூறும் சொற்களிலும் சார்பற்ற நடுவு நிலைமை இருக்கும்.

" சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்" [குறள் 119]

**5. பொருள்செயல்வகை**

" குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை" [ குறள் 758]

தனக்கு மிஞ்சிய தானம் தர்மம் என்பார்கள். வருவாய் அறிந்து அதற்கேற்ப சிக்கனத்துடன் வாழ்ந்து காட்டுவது என்பது குன்றின் மீது ஏறி பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப்போரைக் காண்பதற்குச் சமம் என வள்ளுவர் கூறுகிறார். வருமானத்திற்கு தகுந்தாற்போல் விருந்தினரை உபசரித்தலே நலம் பயக்கும்.

உழவு

" உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை" [ குறள் 1036]

உழவர்கள் பயிர்த்தொழில் செய்யாது விட்டால் பற்றற்ற துறவிகளுக்குக்கூட வாழ்க்கை இல்லை எனக் குறள் கூறுகிறது. பற்றற்றவர்களுக்கே வாழ்க்கை இல்லை எனில் பற்றுள்ள மனிதர்களுக்கு நிச்சயமாக வாழ்க்கை இல்லை எனத் துணிந்து கூறலாம். உழவு இல்லையெனில் விருந்தோம்பல் இல்லை என ஒற்றை வரியில் கூறி விடலாம்.

**வருவிருந்தினரின் (GUEST) பண்புகள்**

1. ஏற்றுக் கொள்ளும் பண்பு
2. பணிவு
3. உண்மைத்தன்மை

**தருவிருந்தினரின் (HOST) பண்புகள்**

1. அன்புடைமை
2. பொறுமையுடைமை
3. காட்சிக்கு எளிமை
4. விருந்தளிக்கும் பாங்கு

**முடிவுரை**

வாழ்க்கைத் துணை நலத்தாலும் மக்கட்பேறினாலும் இல்வாழ்க்கையில் அன்பானது ஊற்றெடுக்கின்றது. அவ்வாறு சுரக்கின்ற அன்பை குடும்ப உறவுகளிடையே மட்டும் வெளிப்படுத்தாமல் புதியவர்களிடத்திலும் அன்றைய தமிழர்கள் பகிர்ந்து கொண்டார்கள். அவ்வாறான அன்புப் பகிர்தலையே விருந்து என்கின்றோம். புதியவர்களை உபசரித்தலையே விருந்தோம்பல் என்று கூறுகின்றோம். அன்புப் பெருக்கே விருந்தோம்பலின் அச்சாணியாக, ஆனி வேராக இருக்கின்றது. வாழ்க்கைத் துணை நலம், அன்பு, நடுவுநிலைமைப் பண்பு, இனிய மொழிகளைக் கையாளும் தன்மை, பொருளைக் கையாளும் விதம் ஆகியவை விருந்தோம்பல் பண்பை வளர்க்கக் கூடிய வாண்மைத்துவமாக இருக்கின்றன.

**துணை நின்ற நூல்கள்**


1. ஆசிரியர் குழு (1997), க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, க்ரியா பதிப்பகம்
2. இறையன்பு (2022), விருந்தோம்பல், கற்பகம் புத்தகாலயம்
3. சாதிக்பாட்சா (தொ.ஆ.) (2015), ஆற்றுப்படைகளின் ஆய்வுக்கூறுகள், இராஜா வெளியீடு
4. சுப்பிரமணியன் (2019), திருக்குறள் தெளிவுரை, இசையரசி பதிப்பகம்
5. தமிழாசிரியர் குழு ( 2022), திருக்குறள்-பொக்கிசம், திருவள்ளுவர் கல்விக்கூடம்
6. திருவேணி வெ.(2019), சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல், சாரதா பதிப்பகம்
7. பெரியண்ணன் கோ. ( 2006), நீதி நூல்கள், வனிதா பதிப்பகம்